விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 297 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 25 புதன்கிழமை (12.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்ப்பாணத்தில் வாடி வீடுகளை அபிவிருத்தி செய்யத் தீர்மானம்

### அமைச்சர் பந்துல குணவர்தன



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வாடிவீடுகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாடி வீடுகளை அபிவிருத்தி செய்யும் நகர மயமாக்கல் அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் 15

## பொதுமக்களுக்கு பொறுப்பாக பதிலளியுங்கள்

### அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

பொதுமக்களால் அரச நிறுவனங்களிடம் கையளிக்கப்படும் கடிதங்கள், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கும் செயற்பாட்டை நெறிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் 15

### நாடு இராணுவரீதியாக மட்டுமின்றி

# பொருளாதாரரீதியாகவும் பாதுகாக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தில் மட்டுமன்றி உணவு மற்றும் பொருளாதார பாதுகாப்பிலும் தங்கியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதி செய்யும் நிகழ்ச்சி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். 15

### ஹெரோயினுடன்

## கரணவாயில் இருவர் கைது

(கரணவாய்)

ஹெரோயின் போதைப் பொருட்களுடன் கரணவாயில் இரு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களிட 15

### நெல்லியடியில்

## கஞ்சாவுடன் பெண் கைது

(கரணவாய்)

நெல்லியடியில் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி புதிய சந்தை பகுதியில் நேற்று பிற்பகல் சந்தேகத் 15

### கிளிநொச்சியில்

## வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் வட்டக்கச்சியைச் சேர்ந்த ஜெயசீலன் (வயது 33) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். 15

## மக்களின் இறையாண்மையை ரணிலின் யோசனை பாதிக்கும்

### ரஞ்சித் மத்தும பண்டார



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மக்களின் இறையாண்மைக்கு பாரிய சவாலாக அமைவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். 15

## உணவுத் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கும்

### குடும்பங்களின் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

உணவுத்தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களின் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

நாட்டு மக்களை 15

## லாஃப் சமையல் எரிவாயு விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)

லாஃப் சமையல் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் லாஃப் கொள்கலன் ஒன்றின் விலை 500 ரூபாயினால் குறைக் 15

## நடுத்தர வருமானமுடைய நாடே இலங்கை

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

இலங்கை ஒரு நடுத்தர வருமான நாடாகவே இருக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

இலங்கையை குறைந்த வருமானம் கொண்ட நாடாக வகைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதிவழங் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கிக்கு பிரதி ஆளுநர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநராகவும் நாணயச் சபையின் செயலாளராகவும் கடமையாற்றிய கே.எம்.ஏ.என்.தெளலகல, ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக பதவி உயர்வு பெற்றுள்ளார் என்று வங்கி நேற்று அறிவித்துள்ளது.

அறிவிப்புக்கு அமைய, நிதி அமைச்சரின் அனுமதியுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## திடீர் சுகயீனம் காரணமாக

# நுவரெலியாவில் 42 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(நுவரெலியா)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கொட்டகலை பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 42 மாணவர்கள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தரம் 6 முதல் 11ஆம் வகுப்பு வரையான 13 மாணவர்களும் 29 மாணவிகளுமே மயக்கம், காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகளால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் சிலர் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாகவும், ஏனையோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதாகவும், மாணவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லை எனவும் கொட்டகலை பிரதேச வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலருக்கு நேற்று முன்தினம் குறித்த நோய் அறிகுறிகள் தென்பட்டதாகவும், அவர்கள் அன்று மாலை கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13091)

**077 911 6983, 076 755 8606**



## சணல் ஆடுகள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சணல் ஆடுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

(13088)

**077 978 9375**
**077 517 3798**


# வவுனியாவில் ஹெரோயினுடன் இளைஞன் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம்பகுதியில் இளைஞன் ஒருவர் ஹெரோயின் தூளினை தனது உடைமையில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

நேற்றுக் காலை பூந்தோட்டம் கண்ணன் கோட்டம்பகுதியில்மடுகந்த விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது ஹெரோயின் தூளை தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 3கிராம் 770 மில்லிக்கிராம் ஹெரோயின் தூள் மீட்கப்பட்டுள்ளது. (ம-7,299)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- தரகர் தேவையில்லை.
- A9 வீதி முகப்புடன் காணி உள்ளது.

**077 874 8135, 077 408 2649**

(13091)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **ரூபகௌரி மதனராசா**
அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர் **சொக்கலிங்கம் முருகையா**

(நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்னாள் சேவையாளர்)

அவர்கள் 07.10.2022இல் காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

(13079)


கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை (வ/து)

## எழுதுனர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் கீழ்வரும் பணிநிலைக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| **சங்கத்தின் பெயர்** | : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை (வ/து) A9 வீதி, டிப்போ சந்தி அருகாமை, கிளிநொச்சி. |
| **பதவி நிலை** | : எழுதுனர் - 302/14 |
| **சம்பள அளவுத் திட்டம்** | : 15,960.00 - 135X10 - 145X10 - 18,760.00 |
| **மேலதிக படிகள்** | : வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவால் பரிந்துரைக்கப்படும் படிகள் |

**அடிப்படைத் தகைமை**

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுனர் / காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி /க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**வயது எல்லை** 18-45 (கூட்டுறவு சேவையில் உள்ளவர்களுக்கு பொருந்தாது.)

மேற்படி பதவி நிலைக்கான விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து சான்றுப் பிரதிகளுடன் 28.10.2022ம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபால் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தலைவர், மாவட்ட கூட்டுறவு சபை எனும் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தலைவர்**
**மாவட்ட கூட்டுறவு சபை,**
**கிளிநொச்சி.**

(C-5080)


# புராணங்களை அனுதினம் ஓதியவர் அமரர் வேலாயுதம் வினாசித்தம்பி



மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வேலாயுதம் வினாசித்தம்பி அவர்கள் கந்தசஷ்டி காலத்தில் சைவாலயங்களில் கந்தபுராணம் படித்துப் பயன்கூறும் திருத்தொண்டை புரிந்து அண்மையில் தமது எழுபத்து எட்டாவது வயதில் இறைபதம் அடைந்துள்ளார்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம், வடகோவை ஸ்ரீ சித்திர

> "கந்தபுராணம் - ஏனைய புராணங்களை வாழ்வியல் ஆயுதங்களாக இறுகப்பற்றி இறை அன்பைப் பெற்று வாழ்வியலில் வெற்றி கண்டு வாழ்ந்த மாண்புமிக்க மனிதர் புராணபடன வித்தகர் மிருசுவில் அமரர் வேலாயுதர் வினாசித்தம்பி ஐயா அவர்கள்"

**மறைந்தார் மாண்பு**

வேலாயுதப் பெருமான் ஆலயம் உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சைவாலயங்களில் புராணம் படித்துப் பயன்கூறும் திருத்தொண்டை மேற்கொண்டு வந்துள்ளார்.

புராணபடன வித்தகர் வினாசித்தம்பி ஐயா அவர்களின் தோற்றப் பொலிவும், திருநீற்றுப் பூச்சும் தியானத்தில் சிலை போல் அமர்ந்து புராணம் படித்துப் பயன்கூறும்போது அடியவர்களும் மெய்மறந்து மணித்தியாலக்கணக்காக அலுப்பு சலிப்பு இன்றி புராணத்தினுள் மூழ்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்தாவிட்டால் வீதியில் இறங்கி போராடுவோம்

## அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை



(கொழும்பு)

**தேர்தல் ஒன்று இல்லாமல் முன்னேற்றம் ஒன்று இல்லை. எனவே, அரசு தேர்தலை நடத்தாவிட்டால் வீதியில் இறங்கி அதற்காகப் போராடுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் உடுதும்பர தேர்தல் தொகுதிக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"அமைதியான போராட்டங்களைக் கண்டும் அரசாங்கம் அச்சமடைகின்றது. காலிமுகத்திடல் வளாகத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டது.

அரச பயங்கரவாதத்துக்கும் அரச வன்முறைக்கும் நீண்ட கால ஆயுள் இல்லை. இதற்கு வரலாற்றில் பல படிப்பினைகள் உள்ளன.

உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுகின்றேன். முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துங்கள்.

தேர்தலை ஒத்திவைக்கப் பல்வேறு சூழ்ச்சிகளைப் பயன்படுத்துவதை விடுத்து முடிந்தால் 'மொட்டு' விரும்பும் எந்தத் தேர்தலையும் நடத்துங்கள்" என அவர் தெரிவித்தார். (நி)

## உருகுணை பல்கலையில் பகிடிவதை 200 மருத்துவபீட மாணவர்களுக்கு வகுப்புத்தடை

(கொழும்பு)

உருகுணை பல்கலைக் கழகத்தின் சுமார் 200 இற்கும் அதிகமான இரண்டாம் வருட மருத்துவபீட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உருகுணை பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கு புதிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மருத்துவ பீட மாணவர்களுக்கு பகிடிவ்தை மேற்கொண்டமையினால் குறித்த மாணவர்களுக்கு இவ்வாறு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

உருகுணை பல்கலைக் கழகத்தின் பதில் பீடாதிபதி பேராசிரியர் சன்ன யஹத்துகொட இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். (நி)

## டொலர் இன்மையால் 20 நாட்களாக நங்கூரமிட்டுள்ள எரிபொருள் கப்பல்

(கொழும்பு)

99,000 மெற்றிக் தொன் கச்சா எண்ணெய் கொண்ட கப்பல் ஒன்று 20 நாட்களாக கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் கடலில் நங்கூரமிட்டுள்ளது.

7 மில்லியன் டொலர்கள் இல்லாத காரணத்தினால் இந்தக் கப்பலில் இருந்து இறக் கும் பணிகள் இடம்பெற வில்லை என்பதோடு தாமதக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி நங்கூரமிட்ட ஒரு நாளுக்கு தாமதக் கட்டணமாக ஒன்றரை இலட்சம் டொலர்கள் செலுத்த வேண்டும் என்றும் மொத்தமாக 110 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோரல் எனர்ஜி நிறுவனத்திடம் இருந்து ஓடர் செய்யப்பட்ட யூரல் கச்சா எண்ணெய் அடங்கிய இந்தக் கப்பல் செப்டெம்பர் 20 ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது.

அதனை விடுவிப்பது தொட ர்பாக நிதியமைச்சு மற்றும் திறைசேரியுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாகவும் எரிசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

## தேர்தலை தாமதப்படுத்த அரசாங்கம் தீவிர முயற்சி

### பவ்ரல் அமைப்பு சாடல்

(கொழும்பு)

தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக பவ்ரல் என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழுக்களை நியமித்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துதல் போன்றவற்றின் ஊடாக அரசாங்கம் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சிப்பதாக தெரிவித்துள்ளது. பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் திருத்தம் செய்வதாகவும் புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்வதாகவும் கூறி அரசாங்கங்கள் தொடர்ச்சியாக தேர்தல்களை காலம் தாழ்த்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்த நிதி வசதி இருந்தால் ஏன் தேர்தல் நடத்தப்பட முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

## 249 விசேட மருத்துவர்கள் ஒரே நாளில் ஓய்வு

### மருத்துவமனை கட்டமைப்பில் நெருக்கடி

(கொழும்பு)

இலங்கையில் விசேட மருத்துவர்களின் தேவையில் 45 சதவீதம் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் 249 விசேட மருத்துவ நிபுணர்கள் ஒரே நாளில் ஓய்வு பெறவுள்ளனர்.

இதன் காரணமாக மருத்துவமனை கட்டமைப்பு கடும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என விசேட மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெறுவதால் மருத்துவப் படிப்புக்குப் பின்னரான பயிற்சியும் பாதிக்கப்படலாம் என்று மருத்துவப் பயிற்சி நிறுவன இயக்குநர் எழுத்து மூலம் சுகாதாரச் செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பயிற்சியை முடித்துக் கொண்டு இலங்கைக்கு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படும் மருத்துவர்களின் சேவையை ஓய்வுபெற்ற விசேட மருத்துவ வெற்றிடத்திற்காக இணைத்துக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

## சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் தொடர்பான அனைத்து கட்டணங்களும் உயர்வு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான கட்டணத்தை திருத்தியமைத்து புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிட்டுள்ளார்.

அதன்படி, புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல், சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல் அல்லது [illegible] படியாகும் காலத்தை நீடித்தல் ஆகியவற்றுக்கான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

அத்தோடு, சாரதி அனுமதிப்பத்திர எழுத்துத் தேர்வு, நடைமுறைத் தேர்வு ஆகியவற்றுக்கான கட்டணங்களும் திருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை சுப்பர் கிங்ஸ் கிரிக்கெட் அக்கடமியை தொடங்கி வைத்த தோனி




சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் சார்பில் சென்னை துரைப்பாக்கம், சேலம் வாழப்பாடியில் கடந்த ஏப்ரல் மாதம் கிரிக்கெட் பயிற்சி அக்கடமிகள் தொடங்கப்பட்டன.

இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் எம்.எஸ்.தோனி குளோபல் பள்ளியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அக்கடமி அமைக்கப்படுகிறது.

இதற்கான தொடக்க விழா நேற்று நடந்தது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கேப்டன் தோனி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். (6)

# முத்தரப்பு இருபது-20 தொடர் பாகிஸ்தானை தோற்கடித்தது நியூஸிலாந்து



நியூஸிலாந்து, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு இருபது-20 தொடரின், நான்காவது போட்டியில், நியூஸிலாந்து அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

கிறிஸ்ட்சர்ச்சில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் மோதின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 130 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 131 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 16.1 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்து. நியூஸிலாந்து அணி, 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 42 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 1 பவுண்டரி அடங்கலாக 62 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பின் அலென் தெரிவு செய்யப்பட்டார். (6)

# ரொனால்டோவின் புதிய மைல்கல்



போர்த்துக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கிளப் அணிகளுக்கான போட்டிகளில் 700 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார்.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் அணிக்காக போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடி வருகிறார்.

தற்போது நடைபெற்று வரும் பிறீமியர் லீக் கால்பந்து தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் மான்செஸ்டர் மற்றும் எவெர்ட்டன் அணிகள் மோதின.

இதில் மான்செஸ்டர் அணியின் சார்பில் ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். 37 வயதாகும் ரொனால்டோ 943 கிளப் போட்டிகளில் 700 கோல்களை அடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2713

### சுலக்சன்




### தனிஷா




### றியாஷ்




### நிதேஷ்




### பிரியா





### சரவணன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய மின்னுற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் திறப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட நாவற்காடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு. கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் சூரிய சக்தி மின் நிலையம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதற்கமைய சுமார் 2.5 பில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்டுள்ள குறித்த சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக பிறப்பிக்கப்படும் மின்சாரமானது நேரடியாக மின்சார சபைக்கு வழங்கப்பட்டு மக்கள் பாவனைக்கான பொது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. (நி)

# திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர்கள்



(திருமலை)

புத்த சாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரம நாயக மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தனர்.

திருகோணமலையில் பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு விஜயம் செய்த அவர்கள் அங்கு விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டதோடு கோணேஸ்வரம் கோவிலில் தொல்பொருள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகள் எனக்கருதி ஆக்கிரமிக்கப்படும் காணிகள் தொடர்பாகவும் அங்கு நிறுவப்பட்டு வரும் கடைத் தொகுதிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

கோவில் விஜயத்தின் பின்னராக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட கோவில் நிர்வாகத்தினருடன் குறித்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (நி)

# இலங்கை உள்ளிட்ட 53 ஏழை நாடுகளுக்கு அவசரமாக கடன் நிவாரணம் தேவை

## பவ்ரல் அமைப்பு சாடல்

(கொழும்பு)

உலகளாவிய நெருக்கடி கள் அதி கரித்து வரும் நிலை யில், உலகின் மிக வறிய மக்களில் பாதிக்கும் மேற் பட்டவர்கள் வசிக்கும் இலங்கை உட்பட 54 நாடுகளு க்கு கடன் நிவாரணம் மிகவும் அவசியத் தேவையாக உள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. நேற்று செவ்வாய்க் கிழமை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், வளரும் நாடுகள் கடன் நெருக்கடியை எதிர்கொள் வதாகவும் 'செயலற்ற தன்மையின் அபாயங்கள் பயங்கரமானவை' என்றும் எச்சரித்துள்ளது.

ஏழை, கடனாளி நாடுகள் ஒன்றிணைந்து வரும் பொரு ளாதார அழுத்தங்களை எதிர் கொள்கின்றன என்றும் மேலும் பலர் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவோ அல்லது புதிய நிதியுதவியை அணுகவோ இயலாதுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி மற்றும் பணச் சுருக்கம் மற்றும் குறைந்த வளர்ச்சி ஆகியவை உலகெங்கிலும் ஏற்ற இறக்கத்தை தூண்டுவ தால் சந்தை நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன.

கொவிட்-19 தொற்று நோயி னால் நீண்ட காலத்திற்கு முன்பே பாதிக்கப்பட்ட பல நாடுகளில் கடன் பிரச்சினை கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. (நி)


## இதய அஞ்சலி

எமது பல்கலைக்கழக நண்பனும்
யா/செங்குந்தா இந்துக் கல்லூரி
ஆசிரியருமான
வீரசிங்கம் ரங்கநாதன்
அவர்களின் அன்புத் தந்தை

### தாமு வீரசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!



(c-5074)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
யாழ்.பல்கலைக் கழக 95/96 நண்பர்கள்


# இராசிபலன்

12.10.2022
புரட்டாதி 25, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 3.07 மணிவரை
பரணி முன்னிரவு 7.05 மணிவரை
சுபநேரம்- 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02- 1.32 மணிவரை
சித்தாமிர்தம்,
சந்திராஷ்டமம்-அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்** – உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** – வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** – குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு,காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** – பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்** – பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்,வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** – பொதுவாழ்வில் புகழ் கூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப்பொறுப்புக்கள் கூடும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** – தொழிலில் உயர்ந்த நிலையை அடைய வழி பிறக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி** – குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு** – கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்** – எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்,தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத்திறக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மணியம்தோட்டம் இணைந்த கரங்கள் அமைப்பு "சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை" முன்னிட்டு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் மற்றும் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய பங்கு என்பவற்றின் ஆதரவிலும் மணியம்தோட்டம் ஒன்றி ணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பு அதன் இளையோர் கழகம் என்பவற்றின் பங்களிப்போடும் இலவச மருத்துவ முகாம் நிகழ்வு அண்மையில் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் இடம்பெற்றது. இதில் 250 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டு இலவசமாக நீரிழிவு,இரத்த அழுத்தப் பரிசோதனைகளுடன் இலவச மருத்துவ சேவைகளைப் பெற்றனர்.

# நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்வு இன்று யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விசேட நுளம்புக் கட்டுப்பா ட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை தொடக்கம் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக் கத்திலிருந்து எம்மைப் பாது காக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண் டும்.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந் தத் தேசிய நிகழ்வு அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்து ழைப்பு வழங்கி தங்கள் தங்கள் வாழிட ங்கள், சமய நிறுவனங்கள், அரச தனியார் நிறுவனங்கள், பொதுச்சந்தைகள் மற்றும் மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாகப் பேணுமாறு யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்தவகையில் இன்று புதன் கிழமை ஜே/87 பிரிவில் உள்ள ஒஸ்மானியாவில் உள்ள கிளினிக் நிலையத்திலும் நாளை வியாழக்கிழமை ஜே/102 பிரிவில் உள்ள யாழ். மாநகர சபையிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஜே/62 பிரிவில் உள்ள கொழும்புத் துறை சுவாமியார் வீதியில் உள்ள கிளினிக் நிலையத்திலும் இடம்பெறவுள்ளது.

இம்முறை டெங்குப் பெருக்கத்திற்கு சாதகமாக நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள் மற்றும் ஆலய ங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளுக்கு களத் தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-6)

# சதுரங்க சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(குப்பிழான்)

யாழ்.பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக யாழ்.மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் சதுரங்க விளையா ட்டினை ஊக்குவிக்கும் நோக் கத்துடன் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைக ளில் சதுரங்க சுற்றுப் போட்டி யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி யில் நடத்தப்பட்டது.

இந்நிலையில் சதுரங்க சுற்றுப் போட்டியின் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அன்றைய தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. (6-18)

# விளக்கமறியல் நீடிப்பு

(அராலி)

பதின்ம வயது சிறுமியை வன்புணர்வுகுட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான வயோதிபரின் விளக்கமறியலை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

குறித்த சிறுமியிடம் வாக்கு மூலம் பெற்ற பொலிஸார் பாதிக்கப்பட்ட சிறுமியை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைக்கவும் குறித்த சந்தேகநபரை நேற்று முன்தினம் வரைவிளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கினை நேற்று முன்தினம் விசாரித்த யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (6-104)

# வேலணை பிரதேச சபை

**மண்டைதீவு சூழலியல்சார் சுற்றுலா மையத்தில் நீர் சார்ந்த விளையாட்டுக்கள் (Water sports) மற்றும் ஏனைய சுற்றுலா சேவைகளை வழங்குவதில் முதலிட விரும்பும் ஆர்வமுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தும் முன்மொழிவுகளை (Expression of Interest -EOI ) கோருகின்றது.**

1. மண்டைதீவில் உள்ள சூழலியல்சார் சுற்றுலா மையத்தில் (Ecotourism Center) சுற்றுலாப் பயணிகளுக்கான நீர் சார்ந்த விளையாட்டுக்கள் (Water sports) மற்றும் ஏனைய சுற்றுலா செயற்பாடுகள் (Other recreational activities) தொடர்பான சேவைகளை வழங்குவதில் முதலிட விரும்பும் ஆர்வமுள்ள தகுதியான முதலீட்டாளர்கள் அல்லது சேவை வழங்குநர்களை பிரதேச சபைத் தலைவர் அழைக்கின்றார்.
2. ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் சுற்றுலா சார்ந்த சேவைகளை வழங்குவதற்கான தங்கள் தகுதியை நிரூபிப்பதற்கான தகவல்களை வழங்க வேண்டும் (முன்மொழிவுகள் (Proposal), கையேடுகள்(Brochures), சுற்றுலா சேவைகள் தொடர்பான அனுபவம் (Experience in similar conditions), மற்றும் இச்சேவைகளை வழங்குவதற்கு தங்களிடமுள்ள சாத்தியமான வளங்கள் (Available resources) ) மேலும் தங்கள் தகுதியை வெளிப்படுத்தும் அவசியமான மேலதிக ஆவணங்களையும் இணைக்கலாம்.
3. ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் தங்களுக்கு தேவையான மேலதிக தகவல்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் 12.10.2022 - 26.10.2022 வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பெறலாம்.
   - தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல - 021 221 1506, 021 221 1505, Fax No: 021 221 1506.
   - (Chairman , Velanai Pradeshiya Sabha, Vangalavady ,velanai, Jaffna, Contact No: 021 221 1506, 021 221 1505, Fax No: 021 221 1506 , Email: velanaips@gmail.com )
4. சுற்றுலா சேவைகளை வழங்குவதில் முதலிட விரும்பும் சேவை வழங்குநர்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துவது தொடர்பாக பூரணப்படுத்தப்பட வேண்டிய விண்ணப்பங்களை 12.10.2022 - 26.10.2022 வரை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இது தொடர்பிலான எழுத்து மூலமான விண்ணப்பத்தை வேலணை பிரதேச சபையிடம் சமர்ப்பித்து திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 1000 ஐ காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வத்தை வெளிப்படுத்துவது தொடர்பாக பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்களை பதிவுத்தபால் மூலம் மேற்படி முகவரிக்கு 27.10.2022 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக அனுப்பப்பட வேண்டும். தாமதமாக அனுப்பப்படும் ஆர்வத்தை வெளிப்படுத்துவது தொடர்பான ஆவணங்கள் நிராகரிக்கப்படுவதுடன் முடிவுத் திகதி முடிந்த பின் பெறுகைக்குழு பிரதிநிதிகள் அல்லது சேவை வழங்குநர்கள் முன்னிலையில் மேற்படி ஆவணங்கள் திறக்கப்படும்.
6. எந்தவொரு ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களை (EOI) ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு வேலணைப் பிரதேச சபைத் தலைவருக்கு உரிமை உள்ளது.

**அடிப்படை நிபந்தனைகள்**

1. சேவை வழங்குநர்கள் தங்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த வர்த்தக கலாச்சாரம் உண்டு என்பதை நிச்சயப்படுத்த வேண்டும்.
2. சேவை வழங்குநர்கள் நீர்சார்ந்த விளையாட்டுக்கள் குறிப்பாக உல்லாச படகோட்டல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய பொழுதுபோக்கு சேவைகளை நடாத்தும்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பாதிக்காத வகையில் செயற்படுத்தப்படுவதை நிச்சயப்படுத்த வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் நீர் சார்ந்த விளையாட்டுக்கள் குறிப்பாக உல்லாச படகோட்டல் செயற்பாடுகளை செயற்படுத்தும்போது, உல்லாசப் படகோட்டல் உபகரணங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான காப்புறுதி ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
4. சேவை வழங்குநர்கள் நீர்சார்ந்த விளையாட்டுக்கள் குறிப்பாக உல்லாச படகோட்டல் செயற்பாடுகளை செயற்படுத்தும்போது அவை சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் அல்லது சூழலுக்கு நட்புறவான வகையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
5. சேவை வழங்குநர்கள் சுற்றுலாச் செயற்பாடுகள் இடம்பெறும் பகுதிகளை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டும்.

ந.கருணாகரகுருமூர்த்தி
தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
வேலணை பிரதேச சபை,
வங்களாவடி,
வேலணை, யாழ்ப்பாணம்,
12.10.2022.

(C-5075)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் ஆலோசனைக்காக செல்லும் பல்கலை மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## பேராதனை பல்கலை மருத்துவ அதிகாரி அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழக சுகாதார நிலையத்திற்கு கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இதுவரை 140 மாணவிகள் உளவியல் ஆலோசனைக்காக வந்துள்ளதாகவும் அவர்களில் 10 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பேராதனை பல்கலைக்கழக சுகாதார நிலையத்தின் பிரதம மருத்துவ அதிகாரி சந்திம ஹேரத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களில் சிலர் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாகவும் அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயன்றதாகவும் மருத்துவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 8 மாதங்களில் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் தற்கொலைக்கு முயன்றதை அடுத்து, உளவியல் ஆலோசனை சேவைகளை விரிவுபடுத்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. சமூகத்தில் மாணவர்களின் மனநிலை குலைவதற்கு பல பிரச்சினைகள் உள்ளதாகவும் தொடர்ந்து மன அழுத்தத்தில் இருக்கும் மாணவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் கிடைக்காவிட்டால், மன உளைச்சலுக்கு ஆளாகி , இழக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# அழகுசாதனப் பொருட்களின் தடையால் பலர் வேலையிழக்கும் அபாயம்

(கொழும்பு)

இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் அழகுசாதனப் பொருட்கள் விற்பனையகம் மற்றும் அதனுடன் சார்ந்த தொழிற்றுறைகள் கடுமையான நெருக்கடியை சந்தித்து வருகின்றன.

இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினாலும் உள்ளூர் பொருட்களை மாத்திரம் பயன்படுத்தியும் இத்துறையை நடத்த முடியாது என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மூலப்பொருட்களின் பற்றாக்குறையால் கிட்டத்தட்ட தொண்ணூறு சதவீத சலூன்கள் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன.

மேலும் இத்துறையில் கிட்டத்தட்ட 400,000 பேர் வேலை செய்கிறார்கள் மற்றும் இலட்சக்கணக்கானோர் அவர்களை நம்பியிருக்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை நீடித்தால் பெருமளவிலானோர் தங்களது வேலையை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி)

# உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி; இணையத்தளமூடாக விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவோருக்கான விண்ணப்பங்களை இணையத்தளத்தினூடாக மாத்திரம் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 7 ஆம் திகதி முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் L.M.D. தர்மசேன தெரிவித்தார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசித்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (நி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி. சுகந்தா சதீஸ்குமார்

{BA, NDT (PRI)}

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தைப் பெற்றுக் கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பதவியுயர்வுகளையும் பட்டங்களையும் பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(13082)

பாடசாலைச் சமூகம்
யா/புன்னாலைக்கட்டுவன்
சித்தி விநாயகர் வித்தியாலயம்.

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரி 6 செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/Lவியாபாரம் சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13012 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS இறுதி ஆண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/13008 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: சூரி 10 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: O/L பூசகர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13013 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: சூரி, செவ் 9 இல்<br>தகைமை/தொழில்:A/L சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13010 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Degree in management HR Executive in Charge oF Business Operation<br>எதிர்பார்ப்பு: படித்த வேலையுள்ள பெண் கொழும்பு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13015 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 62½ சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில்<br>தொ.இ:G/13011 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 1<br>கி.பா: 29 சூரி 5 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L அஞ்சல் உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13016 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: சூரி 11 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BSc Software Engineering (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/13014 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலைக்கு அளப்பரிய சேவையாற்றியவரும் பாடசாலையின் பழைய மாணவருமான திரு.யேசுதாசன் யூலன் அமலதாசன் அவர்களின் அன்பு மகள்




செல்வி.
சவ்னா காணிக்கை யூலன்
(M.B.B.S)

அவர்கள் 06.10.2022 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 36வது பட்டமளிப்பு விழாவில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்

(C-5073)


பாடசாலைச் சமூகம்
யா/அல்லைப்பிட்டி
றோ.க.த.க வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதல்களால்
# பற்றி எரியும் உக்ரைன்

(கீவ்)

**உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்யா ஏவுகணைகளை வீசியுள்ளது. இதனால் 10 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**





நேற்று முன்தினம் திங்களன்று உக்ரைன் தலைநகர் கீவ்வின் மையத்தில் உள்ள பரபரப்பான சந்திகள், பூங்காக்கள் மற்றும் சுற்றுலா தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகல் முழுவதும் வான் வழித் தாக்குதல் தொடர்ந்தமையினால் ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் முகாம்களுக்கு ஓடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் ஆரம்பிக்கப்பட்ட நாட்களைப் போன்று நேற்றும் தாக்குதல்கள் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

போர் தொடங்கியதில் இருந்து ரஷ்யா மேற்கொண்ட மிகப் பெரிய வான் வெளி தாக்குதல் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிரிமியன் தீபகற்பத்துடன் ரஷ்யாவை இணைக்கும் பாலத்தின் மீதான தாக்குதலுக்குப் பிறகு இந்த தாக்குதல்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வார இறுதியில் உத்தர விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ரஷ்யா தாக்குதல்கள் வேண்டுமென்றே மக்களைக் கொல்வதற்காகவும் அதே போல் உக்ரைனின் மின் கட்டமைப்பை அழிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்யாவின் இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ரஷ்யாவின் இந்த தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். அத்துடன், இராணுவ நோக்கமின்றி இலக்குகளை அழித்துள்ளனர் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைனிய மக்கள் மீது புடினின் சட்டவிரோத போரின் முழுமையான மிருகத்தனத்தை அவர்கள் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கிறார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, உக்ரைனில் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில், வரும் வாரங்களில் போர் தீவிரத்தை குறைக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்க தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பகைமையை அதிகரிப்பது எவருக்கும் விருப்பமில்லை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம் என்று அவர் தெரிவித்தார். (நி)

## நிலப்பரப்புகள் மீண்டும் உக்ரைன் வசமாவதால் அணு ஆயுதங்களை ரஷ்ய பயன்படுத்தலாம்

### உக்ரைன் முன்னாள் பிரதமர் எச்சரிக்கை

(கீவ்)

உக்ரைன் அதிக நிலப்பரப்பை மீண்டும் கைப்பற்றுவதால் புடின் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக உக்ரைனின் முன்னாள் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



உக்ரைன் எந்தப் பகுதியை மீண்டும் கைப்பற்றுகிறதோ அந்த அளவுக்கு விளாடிமிர் புடின் அணு ஆயுதங்களை நாடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என உக்ரைனின் முன்னாள் பிரதமர் அர்செனி யாட்சென்யுக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"ஏமாற்றுவதும் பொய் சொல்வதும் புடினுக்கு இயல்பான ஒரு வடிவமாகி விட்டதாகவும் அவரது சர்வாதிகாரத்திற்கு எதிராக வலுவான மற்றும் தைரியமான நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைனின் தலைநகர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஏவுகணை தாக்குதலை தொடர்ந்து அவர் இவ்வாறு கூறினார்.

இந்தத் தாக்குதலானது புடின், அவரது இராணுவ அதிகாரிகள் மற்றும் புடினுக்கு ஆதரவான ரஷ்யர்கள் செய்த போர்க்குற்றங்களின் மூர்க்கத்தனமான செயலாகும்.

ரஷ்ய ஜனாதிபதி போர்க்களத்தில் தோற்றுப் போகிறார் என்றும் உக்ரைன் மற்றும் மேற்கு நாடுகளிடமிருந்து ஒன்றுபட்ட பதிலை எதிர்பார்க்கவில்லை என்றும் யாட்சென்யுக் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதைப் பற்றி புடின் பேசுவதற்குக் காரணம் மேற்கத்தேய நாடுகளை அச்சுறுத்துவது, ஆயுத விநியோகத்தை நிறுத்துவது மற்றும் உக்ரைன், ஐரோப்பா மற்றும் உலகம் முழுவதும் பீதியை ஏற்படுத்துவதற்கு என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## ஆயுட்காலம் முடிவடைய முன்னர் மலேசிய பாராளுமன்றம் கலைப்பு

(மலேசியா)

மலேசிய பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படுவதாக பிரதமர் சாப்ரி யாகூப் அறிவித்துள்ளார்.



இதனால், பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவதற்கு 6 மாதங்களுக்கு முன்னரே அங்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக சாப்ரி யாகூப் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மன்னர் சுல்தான் அப்துல்லா அகமது ஷாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து பாராளுமன்றத்தை முன்கூட்டியே கலைப்பதற்கான அனுமதியை கோரினேன். அதற்கு மன்னரும் சம்மதித்து விட்டார்.

இதையடுத்து பாராளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்தி மக்களின் தீர்க்கமான தீர்ப்பைப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துடன் சேர்த்து மாகாண பேரவைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும்' எனத் தெரிவித்தார்.


இன்னும் ஒரு வாரத்துக்குள் தேர்தல் ஆணையம் கூடி, தேர்தலுக்கான திகதியை முடிவு செய்யும். மலேசிய சட்டப்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 60 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆடுதீண்டாப்பாலை

**Botanical Name- Aristolochia bracteolata**
**Family- Aristalochiaceae**





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மென்மையானது. பசுமையான பல கிளைகளைக் கொண்டதும் பல்லாண்டு காலம் வாழக்கூடிய செடி வகையாகும். இலைகள் தனியிலை எதிரிலை அடுக்கம் கொண்டவை. ஒழுங்கான இருபாலான பூக்கள். கடுமையான ஊதா நிறப் பூக்கள், பழங்கள் சோணைகளாக 12 நரம்புகளைக் கொண்டிருக்கும். பெரிய விதைகள்.

பூக்களை தை மாதத்திலும் புரட்டாதி மாதத்திலும் காணலாம். வரண்ட பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகம். இதன் இலைகளை சேகரித்து தேவையான அளவு வெந்நீரில் 2 மணிநேரம் ஊற வைத்து உதாரணமாக 10 கிராம் இலைகளை 100 மில்லி வெந்நீரில் ஊற வைத்து 15-30 மில்லி அளவு அருந்தி வர கிரந்தி, கரப்பான் முதலியன நீங்கும். வயிற்றிலுள்ள குடற் புழுக்கள் அழியும்.

ஆடுதீண்டாப்பாலை வேர் பாம்புக்கடி நஞ்சை நீக்கக்கூடியது. இதன் வேர்களை சேகரித்து நன்றாகக் கழுவி அம்மியில் வைத்து பட்டுப்போல அரைத்து 5 கிராம் அளவு வெந்நீரில் கொடுக்க வேண்டும்.

இதன் முழுச்செடியிலிருந்து சாறு எடுத்து சம அளவு சமஅளவு நல்லெண்ணெய் சேகரித்துக் காய்ச்சி வடிகட்டி கரப்பான் கரும்படைக்கு பூசலாம். ஆடுதீண்டாப்பாலை இலையையும் இளம் தளிரையும் கைப்பிடி அளவு எடுத்து அம்மியில் வைத்து மை போல அரைத்து 5 கிராம் அளவு அரை டம்ளர் தயிரில் போட்டு கலக்கி தொடர்ந்து 3 நாட்களுக்கு காலையில் மட்டும் கொடுக்க சீரபேதி குணமாகும்.

ஆடுதீண்டாப்பாலை கைப்பிடியளவு எடுத்து (இலை, தண்டு, வேர்) அம்மியில் வைத்து 1/2 தேக்கரண்டியளவு மிளகு சேர்த்து மை போல அரைத்து அதை இரண்டு பங்காக்கி காலையில் ஒரு பங்கும் மாலையில் ஒரு பங்குமாக 3 நாட்கள் கொடுத்து வந்தால் கர்ப்பப்பையில் உள்ள நுண்ணிய கிருமிகள் அழிந்து கர்ப்பப்பை பலமடையும்.

வட்டக்கடிக்கு ஆடுதீண்டாப்பாலை வேர் 10 கிராம் அளவு எடுத்து 4 மடங்கும் நீர் விட்டு 1/4 பங்கு ஆக வற்றக் காய்ச்சிய குடிநீருடன் ஒரு மேசைக்கரண்டி ஆமணக்கு எண்ணெய் சேர்த்துக் கொடுக்க நீங்கும்.

ஆடுதீண்டாப்பாலை வேர்களை கசக்கி சாறு எடுத்து ஆமணக்கு எண்ணெயுடன் சேர்த்து கரப்பானிற்கு பூசலாம்.

இச்செடியின் உடன்சாறு 200 மில்லி எடுத்து தேங்காய் எண்ணெய் 300 மில்லி அளவு கலந்து கலக்கி அடுப்பேற்றி பதத்தில் காய்ச்சி இறக்க 20 கிராம் விளைவு சூடனை பொடித்து போட்டு ஆறியதும் புட்டியில் இட்டு வைத்துக் கொள்ளவும். நீர் வடியும் கரப்பான் சிரங்கிற்கு பூசி வர புண்கள் முற்றாக ஆறும்.

இரத்தத்தை சுத்தி செய்யக்கூடியது. இலைகளை உப்பு நீரில் கழுவி நன்றாக மை போல அரைத்து எவ்விதமான தோல் வியாதிகளுக்கும்வெளிப்பிரயோகமாக பூசலாம்.

விஷமுள்ள பாம்புகள் தீண்டி விஷம் ஏறினால் ஆடுதீண்டாப்பாலை இலைகளை சுவைத்தால் இனிக்கும். விஷமில்லாவிட்டால் சுவைக்கும் போது இலைகள் அதன் சுவையான கசப்பு சுவையாகவே இருக்கும்.

இதனுடைய இலைகளை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து பெண்களுக்கு மாதவிடாய் ஆகி 3 நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்கலாம். இவ்வாறு 3 நாட்கள் வீதம் 3 மாதங்களிற்கு மாதவிடாய் வரும் காலங்களில் எடுத்து வர கர்ப்பப்பை பலமாகி கர்ப்பக் கிருமிகள் நீங்கி மலட்டுத்தன்மையும் நீங்க வழி வகுக்கும். இதனால் இம் மூலிகையை மலட்டுத் தன்மை போக்கி என்றும் கூறுவர்.

ஆடுதீண்டாப்பாலை வேரைச் சேகரித்து வெட்டி கழுவி உலர்த்தி 2 கிராம் அளவு வெந்நீருடன் கலந்து கொடுக்க பிரசவ வலியைத் தூண்டும். ஆடுதீண்டாப்பாலை விதைகளை சேகரித்து பொடித்து அரித்து 10-15 கிராம் அளவு 7 நாட்கள் எடுத்து வர மாதவிடாய்க் காலத்தில் இரத்தப் போக்கு சீராகும். ஆடுதீண்டாப்பாலை பூண்டின் சாறு 400 மில்லி அதேயளவு நல்லெண்ணெய் கூட்டி எரித்து பக்குவப் பாகத்தில் எடுத்து வடிகட்டி கரும்படை, கரப்பான் இலைகளுக்கு பூசி வரலாம். தோல் நோய்களுக்கும் விஷக்கடிக்கும் சிறந்த மூலிகை ஆடுதீண்டாப்பாலை ஆகும். கரிசல் நிலங்களில் இம் மூலிகையின் பரம்பல் அதிகமாகும்.

# சமனான ஊட்டச்சத்தான உணவுக்கான தேவை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பேரிடி போல வந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து இத்தேசம் மீள்வதற்கான அணுகுமுறைகளை நிதி வழங்கும் நாடுகளினதும் அமைப்புக்களினதும் பரிந்துரைகளை கவனத்தில் கேட்டு உருவாக்கி அதனை அனைத்து மக்களும் அனைத்து மட்டத்திலும் செய்து காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்நிலையில் இளவயதினரிடையே குறிப்பாக குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு பற்றிய தகவலொன்று அனைவரையும் சிந்திக்க தூண்டியிருக்கின்றது. இது வொரு அவசரமான அறைகூவலாக சுகாதாரப் பகுதியிலிருந்து விடுக்கப்பட்டிருக்கின்றது. வெறுமனே இதனை நாம் அலட்சியப்படுத்திவிடக் கூடாது. பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு குடும்பத்தையும் அதனது வாழ்வாதாரத்தில் பாதித்திருக்கின்றது. குறிப்பாக நிதி நெருக்கடிக்குள் சிக்கி அன்றாடம் தக்கவைத்து தப்பிப் பிழைத்து வாழும் மக்களும் மனைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல் அல்லல்படும் மக்களும் இந்த ஊட்டச்சத்து குறைபாடு (Malnutrition) என்னும் பொறிக்குள் வீழ்ந்து விடுவது சுலபமாகியுள்ளது.

இதற்கான பரப்புரைகளை மக்களுக்கு அறியத் தரும் வழிவகைகளை வலுப்படுத்துவதோடு ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்திக்கும் அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளிலும் நாம் அவசியம் இறங்க வேண்டியவர்களாகியிருக்கின்



றோம். ஒவ்வொருவரின் மனையிலும் நிதிநெருக்கடி யேற்படும் போது சமனான ஊட்டச்சத்தான உணவை அவர்கள் உண்பதற்கான வாய்ப்புக்களை இழக்கின்றார்கள். வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியான குழந்தைகள் இந்த பாதிப்புக்குள் உள்வாங்கப்பட்டால் அவர்களை மீட்டு வளமான சந்ததியாக வளர்த்தெடுக்க மிகுந்த சிரமத்தை சந்திக்க வேண்டியிருக்கும். ஊட்டச்சத்து நலிவடையும் போது தானாகவே உடலில் எதிர்ப்பு சக்தி நலிவடைந்து செல்லும் என்பதனை நாம் அறிந்து கொண்டும் அது பற்றி சிறிதளவிலேனும் அறிந்து பல்வகைத்தன்மையுடைய மனைத்தோட்டத்தை உருவாக்குவது அவசியமாகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் படி ஊட்டச்சத்து குறைபாடு என்பது மூன்று வகைகளுக்குள் உள்ளடங்கியிருக்கின்றது. ஒருவரின் உயரத்திற்கு தேவையான நிறையில் போதாமை (Low weight for Height), ஒருவருடைய வயதிற்கான உயரத்தில் குறைபாடு (Low height for age) மற்றும் ஒருவருடைய வயதிற்கான நிறை போதாமை (Low weight for age) ஆகும். இவற்றுடன் நுண்ணூட்டச் சத்து போதாமை அல்லது அதிகமாக இருப்பதான நிலையிலும் நுண்ணூட்ட

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

ச்சத்தில் குறை விடாது தேவையான நுண்ணூட்டச்சத்துக்களை உணவுடன் வழங்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர் தம்முடைய ஊட்டச்சத்து குறைபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு தாம் பெற்றெடுத்த குழந்தைகளுக்காக தினமும் மூன்று வேளை உணவுக்காக கையேந்தி நிற்கும் நிலையில் இருந்து விடுபட நாடு ரீதியான பொறிமுறையை மேலும் வலுப்படுத்தல் வேண்டும்.

உலகளாவிய ரீதியில் 2014 இல் 462 மில்லியன் மக்கள் குறைவான உடல் நிறையைக் கொண்டிருந்து போது 1.9 பில்லியன் மக்கள் அதிகமான உடல் நிறையைக் கொண்டிருந்தது அறியப்பட்டது. 2016 இல் 5 வயதிற்கு குறைவான 155 மில்லியன் குழந்தைகள் உடல்நிறை குறைவாகவும் உயரத்தில் குறைவானவர்களாகவும் காணப்பட்ட போது 41 மில்லியன் குழந்தைகள் அதிகரித்த உடல்பருமனைக் கொண்டவர்களாக காணப்பட்டமையும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானிய செயற்றிட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அம்பாள் நகர், கனகாம்பிகை குளம் ஆகிய பகுதிகளில் 37.5 ஏக்கர் வரை யான தமது சொந்த நிலங்க ளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வருமான மேம்பாட்டி ற்கான சிறு தானிய மற்றும் விவசாய செயற்றிட்டம் ஆரம் பித்து வைக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வருமான மேம்பாட்டிற்கான சிறுதானிய மற்றும் விவசாய செயற்திட்டம் நகமா நிறுவன நிதி உதவியுடன் ஆரம்பிக் கப்பட்டது. அக்கிராமத்தின் 150 விவசாயிகளுக்கு தலா 1/4 ஏக்கர் நிலப்பரப்பில் உற் பத்தி செய்யக்கூடிய வகையில் மொத்தமாக 37.5 ஏக்கர் தமது சொந்த நிலங்களில் உற்ப த்தியை மேற்கொள்ளக்கூடிய வகையில் நேற்று முதற் கட்ட மாக திருவையாறு, கனகாம் பிகை குளம், அம்பாள்நகர் ஆகிய கிராமங்களை இணைத்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள் ளது. (6-315)

# நவாலி அட்டகிரிப் பகுதியில் இரண்டு குண்டுகள் மீட்பு



(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி - அட்டகிரி பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணியின் உரிமையாளர் வாடகை உழவு இயந்திரம் மூலம் காணியை உழுதுகொண்டு இருந்தவேளை குறித்த குண்டுகள் இரண்டு பைகளினுள் இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டதையடுத்து குறித்த குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (6-104)


## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2022/2023

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | H/LS/ 2022/ 01 தொடக்கம் 10வரை | அழுக்கு துணிகள் சலவைச் சேவை | (அ)பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்திய சாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்திய சாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10.000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்திய சாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்திய சாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10.000.00 |
| | | | (இ) சாவகச்சேரி , ஊர்காவற்றுறை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய்,வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 3000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2- பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொட்க்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 21 ஒக்டோபர் 2022 ஆம் திகதிவரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 25 ஆம் திகதி ஒக்டோபர் 2022 அன்று காலை 09.35 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 19 ஆம் திகதி ஒக்டோபர் 2022 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலககாசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail .com

(சி-5077)


# கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்று வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை களை கட்டுப்படுத்தி ஒரு இளைய தலைமுறையினை பாதுகாப்பதற்கு உரிய அதி காரிகள் நடவடிக்கை எடுக்கு மாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இவ் வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதி களவில் காணப்படுகின்றன.

இதனால் இளவயதுடைய வர்கள் மதுபாவனைக்கு அடி மையாவதுடன் பாடசாலை மாணவர்களும் இதற்கு அடி மையாகி வருகின்ற நிலைமை அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறான போதைப் பொருள் பாவனை அவர்களை பல்வேறு குற்றச்செயல்களிலும் ஈடுபடச்செய்கின்றன.

இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை களை தடுக்க உரிய அதிகாரிகள் ஏற்ற வழிவகைகளை செய்ய வேண்டும் என பல் வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-3[illegible])


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி.

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை 22.10.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 06.11.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 19.10.2022 (புதன்கிழமை) தொடக்கம் 21.10.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ள்லாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.

(சி-5076)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 103

# ஒரு செவிலியின் தந்திரச் செயல்

ஒரு நோயாளி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக சேருகிறான். அவன் மனதில் அணுவளவு கூட தாம் குணமடைவோம் என்ற நம்பிக்கையில்லை. இதனால் அவனின் மனமும் பாதிக்கப்பட்டு உட்கொள்ளும் மருந்தினால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை என புலம்பினான். ஆனால் அவனைப் பேணும் செவிலிப் பெண் மட்டும் நம்பிக்கையுடன் அவனை எப்போதும் ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தாள்.

அவனது அறையின் வெளியில் ஒரு மரம் தனது இலைகளைத் தினமும் உதிர்த்துக் கொண்டே வருகிறது. அந்தக் காட்சி அவனை மிகவும் பாதித்தது. அதைச் சுட்டிக் காட்டி அதைப்போல தானும் செத்துக் கொண்டிருப்பதாக புலம்ப ஆரம்பிக்கிறான். மரத்தின் ஓர் இலையைத் தவிர அனைத்து இலைகளும் உதிர்ந்து போகின்றன.

அந்தக் கடைசி இலை விழும் போது தானும் இறந்து விடுவோம் என அஞ்சுகிறான். செவிலி எவ்வளவு தைரியம் சொல்லியும் அவன் நம்பவில்லை. நாளை காலை கடைசி இலை உதிரும் போது தானும் உதிர்ந்து விடுவேன் என்றே நம்பினான். பொழுது விடிந்தது. என்ன ஆச்சரியம்! அந்த ஒற்றை இலை உதிரவில்லை.!

இதைக் கண்டதும் அவனுக்கு மகிழ்ச்சி பிறந்து விட்டது. நம்பிக்கை விதை முளைவிட்டது. அந்த ஒற்றை இலை போல் தானும் வாழலாம் என எண்ண ஆரம்பித்து விட்டான். மருத்துவரோடும் மருந்துகளோடும் நன்கு ஒத்துழைத்தான். விரைவில் குணமடைந்தான். அவன் வீட்டுக்குச் செல்லும் நாள் வந்தது. செவிலி வந்து அவனை மரத்தருகில் அழைத்துச் சென்றாள். அந்த ஒற்றை இலையைப் பறித்து அவனிடம் தந்தாள்.

அது வெறும் துணியில் வரையப்பட்ட செயற்கை இலை என்பது தெரிகிறது. அதை அந்தச் செவிலி மரத்தின் கடைசி இலை உதிர்வதற்கு முன் ஓர் ஓவியனைக் கொண்டு வரைந்த இலையை மரத்தில் பொருத்தியிருந்தாள். அது அவனது நம்பிக்கையை வளர்க்கும் கருவியாகி வெற்றி பெற்றது. பார்த்தீர்களா! நம்பிக்கை என்னென்ன செய்கிறதென்று! திடமான உள்ளமும் தன்னம்பிக்கையும் இருந்தால் உடலென்ன உலகையே வென்று காட்டலாம்.

- இதை உண்மையென்று நம்புங்கள். உடலும் உள்ளமும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை. அங்கே சிறு நம்பிக்கைத் தூறல் பட்டாலே போதும். செடிகளும் பூக்களும் பூத்துக் குலுங்க ஆரம்பித்து விடும்.!!!



அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# போராட்டங்களின் போது குழந்தைகளை கேடயமாக பயன்படுத்த வேண்டாம்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரிக்கை

**(கொழும்பு) போராட்டங்களின் போது குழந்தைகளை கேடயமாக பயன்படுத்த வேண்டாம் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி. உதயகுமார அமரசிங்க இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.


கடந்த சில மாதங்களாக சிறுவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இது ஒரு விசேட நிலையாக கருதப்பட்டு அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான இடங்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதன் மூலம் அவர்கள் வித்துக்கள், அடக்குமுறைகளுக்கு ஆளாக நேரிடும் எனவும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான முதல் கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

போராட்டங்களின் போது சிறுவர்களுக்கு ஏதேனும் மன உளைச்சல் அல்லது அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# பீதுருதாலகால மலை அடிவாரத்தில் 25 அடி உயரமான முருகன் சிலை



(ஹற்றன்)
பீதுருதாலகால மலை அடிவாரத்தில் அமைக்கப்படவுள்ள 25 அடி உயரமான முருகன் சிலையுடனான ஆலயத்திற்கான அடிக்கல் நேற்றுக் காலை நாட்டப்பட்டது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி சற்குரு சரவணபாபா ஜனன தினத்தன்று இந்த ஆலயத்திற்கான கும்பாபிஷேகத்தை மிகவும் விமர்சையாக நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த ஆலயமானது இலங்கையின் மிகவும் உயரமான இடத்தில் அமையப் பெறுவுள்ளது. இது எதிர்காலத்தில் மிகவும் சிறப்புமிக்க ஒரு ஆலயமாக அமையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## குறிப்பிட்டதொரு தொழிலுக்காக

# ஓய்வூதிய வயதை மாற்றினால் போராட்டத்தில் குதிப்போம்

## சுகாதார நிபுணர் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)
குறிப்பிட்டதொரு தொழிலுக்கான ஓய்வூதிய வயதை நீடித்தால் அத்தகைய முடிவுகளுக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என சுகாதார நிபுணர்களுக்கான கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார நிபுணர்களுக்கான கூட்டமைப்பிற்கான கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அனைத்துப் பொதுத்துறை ஊழியர்களின் ஓய்வு வயதை 60 ஆக குறைக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இவ்வாறான நிலையில் சுகாதாரத்துறையில் குறிப்பிட்டதொரு தொழிலுக்கான இந்த முடிவை மாற்றியமைக்க அமைச்சரவைத் துணைக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் அதன் பங்களிப்பை முற்றிலுமாக புறக்கணிக்கும் முயற்சிகளை சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

அனைத்து சுகாதாரத்துறை தொழில்களையும் சமமாக நடத்தக்கூடாது என்ற அமைச்சரவையில் தீர்மானம் எடுத்தால் தொழிற்சங்க நடவடிக்கைகளை தவிர்க்க முடியாது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## கரடி சொன்ன இரகசியம்

இரண்டு நண்பர்கள் காட்டுப் பாதையில் நடந்து சென்றனர். ஒருவன் நல்லவன் மற்றவன் வஞ்சகன் சுயலாபத்திற்காக நண்பனைப் போல் பழகுபவன்.

எதிரே ஒரு கரடி வந்தது அதைப் பார்த்ததும் நல்லவன், நண்பனையும் சேர்த்துக் கட்டிக்கொண்டான். வஞ்சகனோ அவனை உதறித் தள்ளி விட்டு ஓடிப் போய் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான்.

நல்லவன் மரம் ஏறத் தெரியமால் தத்தளித்தான். நல்ல மனமுள்ளவர்களை இறைவன் கைவிடுவதில்லை. தக்க சமயத்தில்: உதவி செய்கிறார்.

இறந்த உடல்களை கரடி உண்பதில்லை என்ற உண்மையை உணர்த்தினார் உடனே நல்லவன் செத்தவன் போல தரையில் படுத்துக் கொண்டான். கரடி அவனருகே வந்தது முகர்ந்து பார்த்து விட்டுப் போய் விட்டது. கரடி போனதும் வஞ்சகன் கீழே இறங்கி வந்து நண்பனிடம் கேட்டான். "கரடி உன் காதருகில் குனிந்து ஏதோ பேசியதே என்ன?"

நல்லவனுக்கு நண்பனின் துரோகத்தை நினைத்துக் கோபம் கோபமாக வந்தது. அதை மனதினுள் மறைத்துக் கொண்டு அமைதியாகச் சொன்னான்.

"ஆபத்து நேரத்தில் கைவிட்டு ஓடும் வஞ்சகர்களிடம் நட்பு வைத்திராதே" என்று உபதேசித்தது என்றான்.

அதைக் கேட்டதும் வஞ்சகன் அவமானத்தால் வெட்கித் தலை குனிந்தான். தன் வழியே தனியே சென்று மறைந்தான். நல்லவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தீயவர்களின் நட்பு ஆபத்தில் முடியும்.

## யாருக்கும் வரலாம் ஆபத்து

ஒரு கழுகால் பிடிக்கப்பட்ட முயல் குழந்தையைப் போல் அழுது துடித்தது. அதைப் பார்த்த ஒரு குருவி எங்கே போயிற்று உன் வேகம்? நீ வேகமாக ஓடி ஏதாவது புதருக்குள் பதுங்கி இருந்தால் இப்படி கழுகிடம் சிக்கிக் கொண்டிருக்க வேண்டாமே என்று கடிந்து கொண்டது.

இப்படி அது பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு பருந்து அந்தக் குருவி மேல் பாய்ந்து பிடித்து அதைத் தின்னத் தொடங்கியது.

கழுகுக்கு இரையாகிக் கொண்டிருந்த முயல் நீ பாதுகாப்பாக இருப்பதாக எண்ணிக் கொண்டு என்னைக் கடிந்து கொண்டாயே இப்போது நீயே என்னைப் போல துன்பத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளாயே என்று குருவியிடம் கூறியது.

## நிறம் தீட்டுவோம்



த.கிஷோனன்

# சிலப்பதிகாரம்

## கோவலனின் பூர்வஜென்மம்




கபிலபுரத்தில் இருந்த சங்கமன் தன் மனைவியுடன் மாறுவேடத்தில் எப்படியோ சிங்கபுரத்தை அடைந்துவிட்டான். அங்கே வியாபாரத்தில் ஈடுபட முயன்றான்.

'அப்போது உன் கணவன் அங்கே பரதனாக இருந்தான். அரசாங்கத்துக்கு இரகசியத் தகவல்கள் தரும் வேலை அவனுடையது.'

'அந்த பரதன் சங்கமனை ஒற்றன் என்று அரசரிடம் ஒப்படைத்தான்.'

அதனால் கோபப்பட்ட அரசன் சங்கமனைக் கொன்றான்.

'அப்படியானால். சங்கமன் கொலைக்கு யார் காரணம்? உன் கணவன் கோவலனுடைய முன்பிறவியாகிய பரதன் தானே? சங்கமனின் மனைவி அவனுடைய அநியாய மரணத்தைப் பார்த்துத் துடித்தாள் ஒரு சாபம் கொடுத்தாள்.'

'எனக்கு. நேர்ந்த இந்தத் துன்பத்துக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் இனி எத்தனை பிறவி எடுத்தாலும் அவர்களும் இதே துன்பத்துக்கு ஆளாகக் கடவது' என்று சபித்த பிறகு அந்தப் பெண் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

இந்தக் கதையைக் கேட்ட கண்ணகி எதுவும் பேசவில்லை. அதே சமயம் அவளுக்குள் எழுந்திருந்த கோபம் தணியத் தொடங்கியிருந்தது.

அநியாயமாகக் கணவனை இழந்த ஒரு பெண் அவளுடைய சாபம் தான் கோவலனின் மரணத்துக்குக் காரணம் என்று மதுராபதி சொன்னது அவளின் ஆத்திரத்தைக் கொஞ்சம் மட்டுப்படுத்தியிருந்தது.

மதுராபதி தொடர்ந்து பேசினாள்.

'கண்ணகியே பாண்டியன் நெடுஞ் செழியனின் சிறப்புகளைக் கேட்டால் தனக்கு நேர்ந்த அகால மரணத்துக்கு அவன் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்பது உனக்கு விளக்கும்.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு, நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

– அன்னை தெரேசா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் மீது பற்றுக்கொண்ட தமிழ் அரச அதிகாரிகளே!

தமிழ் மக்கள் மீது தமிழ் அதிகாரிகள் பற்றுக் கொண்டவர்களாக இருந்தால், தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் உயர் அதிகாரிகள் பேரினவாதத்தின் கபடத் தனங்களுக்கு இணங்கிப் போபவர்களாக அல்லது அதுகண்டு பேசாதிருப்பவர்களாகவே உள்ளனர்.

இன்னும் சிலர் ஒருபடி மேலாகச் சென்று, பேரினவாதத்துக்குத் தங்களின் அதீத விசுவாசத்தைக் காட்டி நிற்கின்றனர்.

இவற்றைக் கடந்து நீதியின் பால் மனச்சாட்சிப்படி நடக்க வேண்டும் என்று நினைக்கின்ற உயர் அதிகாரிகளைக் கயமைத்தனத்தோடு காட்டிக்கொடுக்கின்ற அதிகாரிகளும் நம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர்.

இந்த நிலை தமிழ் மண்ணில் இருக்குமாயின், தமிழர் பகுதிகளில் தமிழ் அதிகாரிகளை நியமியுங்கள். தமிழர் பிரதேசங்களில் தமிழ்ப் பொலிஸாரை கடமையாற்ற விடுங்கள் என்ற கோரிக்கைகள் பயனுடையதாக இருக்காதென்பது நிறுதிட்டமான உண்மை.

இதற்கு நல்ல உதாரணம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான ஆளுநர்களின் நியமனமாகும்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதால் இந்த மாகாணங்களுக்கு தமிழர்களையே ஆளுநர்களாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அரசியல் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

ஆனால் சிங்கள ஆளுநர்களைவிட தமிழர் ஆளுநராக இருப்பதுதான் ஆபத்தானது என்ற உண்மை இப்போது உணரப்பட்டுள்ளது.

அதாவது தமிழர் ஒருவரை வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக ஆக்கிவிட, அவர் தனது அரச விசுவாசத்தைக் காட்டுவதனூடாகத் தனது பதவியைத் தக்க வைக்க முடியும் என நம்புவார்.

எனவே வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதைத் தட்டிக்கழிப்பதில் அவர் கருசனையாக இருக்க வேண்டுமென நம்புகிறார்.

இதற்கும் மேலாக, தமிழ்ப் பிரதேசங் களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் பேரினவாதத்தின் விருப்பை நிறைவேற்றவும் தாங்கள் அரச விசுவாசிகள் என்பதை நிரூபிப்பதிலும் இவர்கள் தீவிரமாக இருப்பர்.

இங்குதான் தமிழன் தமிழனுக்கு உதவமாட்டான் என்ற முடிவுக்கு வருகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

இது எந்தவகையிலும் நியாயமானதல்ல என்பதால் தமிழ் அரச உயர்அதிகாரிகள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை மக்கள் நலன்சார்ந்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு நல்ல சந்தர்ப்பம் அரச காணிகளை நெல் மற்றும் விவசாயச் செய்கைக்காகப் பொதுமக்களுக்கு வழங்குதல் என்ற அரச அறிவிப்பை உடனடியாக அமுல்படுத்துவதாகும்.

ஆம், தமிழர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அரச காணிகளை நெற்செய்கைக்காகவும் விவசாயத்துக்காகவும் வழங்குகின்ற நடவடிக்கையை உயர் அதிகாரிகள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

அதிலும் நிலமற்றவர்களுக்கு – ஏழை மக்களுக்கு இவற்றை வழங்குவன் மூலம் எம் மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இதனையே அரச காணிகளில் விவ சாயம் செய்வதை அதிகாரிகள் தலையிட்டு தடுக்க வேண்டாம் எனப் பிரதமர் தினேஸ் குணவர்த்தன வலியுறுத்திக் கூறியுள்ளார்.

# இராஜதந்திரிகளின் இலங்கை விஜயத்தால் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

நாட்டுக்கு வெவ்வேறு இராஜதந்திரிகள் விஜயம் செய்கின்றமை தொடர்பில் வீண் அச்சமடையத் தேவையில்லை. இலங்கை ஒரு சுயாதீன அரசு என்ற ரீதியில் ஏனைய அரசுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய தேவை கிடையாது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போது, எரிக் சோல்ஹைம்மின் விஜயம் புலம்பெயர் அமைப்புக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

வெவ்வேறு இராஜதந்திர நபர்கள் நாட்டுக்கு விஜயம் செய்கின்றமை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. நாம் அனைத்து நாடுகளுடனும் பிரிவினையற்ற வெளியுறவுக் கொள்கையின் ஊடாக பயணிப்பதற்காகவே செயற்படுகின்றோம்.

சுயாதீன அரசு என்ற ரீதியில் நாம் ஏனைய அரசாங்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டியேற்படாது என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எரிக் சோல்ஹைம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் நாட்டை வந்தடைந்தார்.

இந்தியாவின் சென்னை நகரிலிருந்து அவர் நாட்டிற்கு வருகை தந்துள்ளார். எரிக் சோல்ஹைம், கடந்த யுத்த காலத்தின் போது நோர்வேயின் அமைதிக்கான பிரதிநிதியாக இலங்கைக்கு பல தடவைகள் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி

## மியன்மாரால் இலங்கைக்கு அன்பளிப்பு

இலங்கை - மியன்மார் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 73 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 1000 மெட்ரிக் தொன் அரிசி மியன்மார் அரசாங்கத்தினால் இலங்கைக்கு நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான மியன்மார் தூதுவர் யு ஹான் து, வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனிடம் அரிசியை கையளித்தார்.

இதன்போது, வர்த்தக அமைச்சின் செயலாளர் S.T.கொடிகாரவும் அங்கு பிரசன்னமாகியிருந்தார். (ம-7)

# நாட்டின் இன்றைய மின்வெட்டு விபரம்

(கொழும்பு)

நாடடில் இன்று புதன் கிழமைக்கான மின்வெட்டு நேர விபரங்களை இலங்கை பொர்துப் பயன்பாடுகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி A,B,C,D,E, F,G,H,I,J,K,L,P,Q,R,S,T, U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் பகலில் ஒரு மணி நேரமும், இரவில் ஒரு மணி நேரம் 20 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

### பிணைமுறி மோசடி வழக்கு

# அர்ஜுன மகேந்திரனை விடுவிக்க நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், முதலாவது திறைசேரிபிணைமுறி மோசடிக் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் உள்ளிட்ட மேலும் பத்துப் பேர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மூவரடங்கிய கொழும்பு விசேட நீதிமன்றம் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவித்து நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிணைமுறி மோசடி வழக்கில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உட்பட பத்துபேருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த பொதுச்சொத்துக்கள் சட்டத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளை முன்கொண்டு செல்ல முடியாது என தீர்மானித்துள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை தீர்ப்பின் பிரகாரம் நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை- கரந்தன், அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு, ஊரெழு [illegible] கோவிலடி, [illegible] Wind Power Plant ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ஆம்பிரிவு இராணுவ முகாம், இரணைப்பாலை, 68 ஆம் பிரிவு டயலொக் கோபுரம், இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஜீவன் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை- காத்தான் தோட்டம், மகாறம்பைக்குளம், மறக்கறம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேச [illegible] மின்சாரம் தடைப்படும்.

### கோவிலாக்கண்டி நெற்செய்கையாளர்களுக்கு

# இன்று யூரியா உரம் விநியோகம்

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட கோவிலாக்கண்டி (ஜே/296) கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற் செய்கையாளர்களுக்கு இன்று புதன் கிழமை கைதடி கமநல சேவை நிலையத்தில் வைத்து கால போக செய்கைக்கான யூரியா உரம் வழங்கப்படும் என கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த தினத்தில் கைதடி கமநல நிலையத்திற்கு யூரியா பெற வரும் செய்கையாளர்கள் 2022ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிச் சிட்டை, சம்மேளன சந்தா பணம் செலுத்திய சிட்டை,தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை (போட்டோ பிரதி) சகிதம் காலை9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிக்குள் வருகை தருமாறு கேட்க்கொள்ளப்பட்டுள்ளனர்.

மூன்று பரப்பிற்கு ஒரு கிலோகிராம் என்ற அடிப்படையில் முதற்கட்ட யூரியா உரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யோர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 98**

ஜேர்மனி 1,000 டேங்கர் எதிர்ப்பு ஆயுதங்களையும் 500 "ஸ்டிங்கர்" தரையிலிருந்து வானில் தாக்கும் ஏவுகணைகளையும் உக்ரைனுக்கு அனுப்பவுள்ளதாக ஜேர்மனி நாட்டு அரசு உறுதி செய்துள்ளது. மோதல் நிகழும் பகுதிகளுக்கு ஆயுத ஏற்றுமதியை தடை செய்யும் அதன் நீண்டகால கொள்கையில் பெரிய மாற்றத்தை இந்த நடவடிக்கை காட்டுகிறது. "இந்தச் சூழ்நிலையில், விளாடிமிர் புடினின் இராணுவத்திற்கு எதிராக உக்ரைனை பாதுகாப்பதில் எங்களால் முடிந்தவரை ஆதரவளிப்பது எங்கள் கடமை," என்று ஜேர்மன் ஜனாதிபதி ஓலோஃப் ஸ்கோல்ஸ் கூறியுள்ளார்.

**உக்ரைனைப் பாதுகாக்க விரும்பும் வெளிநாட்டவர், உலக அமைப்புகள் வரவேற்கப்படுகிறது.**

**உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரியோ குலேபா தனது டுவிட்டர் பக்கத்தில், "உக்ரைனைப் பாதுகாக்க விரும்பும் வெளிநாட்டவர், உலக அமைப்புகள் வரவேற்கப்படுகிறது. இவை உக்ரைன் பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச படை என அறியப்படும் என்று கூறினார்.**

இந்தப் படையில் இணைய விரும்புவோர் அவரவர் நாட்டில் உள்ள உக்ரைன் தூதரகத்தை அணுகலாம். நாம் இணைந்தே ஹிட்லரை வீழ்த்தினோம். இணைந்தே புடினை வீழ்த்துவோம் என்று அறைகூவல் விடுத்துள்ளார்.

முதலாம் உலகப் போரின் போது உக்ரைனியர்கள் ஆஸ்திரியா தலைமையிலான மத்தியப் படைகளில் இருந்தனர். ஆஸ்ட்ரோ ஹங்கேரியன் இராணுவ, உக்ரைனில் திரட்டப்பட்ட படைகளை ரஷ்ய சாம்ராஜ்யத்துக்கு எதிராகப் போராடப் பயன்படுத்தியது. இது பின்னாளில் உக்ரைனியன் காலிசியன் இராணுவமாக அறியப்பட்டது. முதல் உலகப் போர் (1914-18) முடிந்த பின்னர் இந்தப் படை போல்ஷெவிக்ஸ், போலிஷ் படைகளை எதிர்த்து போரிட்டத். ஆனால் முதல் உலகப் போரின் போது உக்ரைனின் சில படைப்பிரிவுகள் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் போரிட்டன.

ஆனால் இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் நாசிப் படைகளுக்கு எதிராக 4.5 மில்லியன் உக்ரைனியர்கள் சிவப்புப் படையில் இணைந்தனர். இந்தப் படை இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனிக்கு எதிரான செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பணிகளை செய்ததாக அறியப்படுகிறது. இந்த வரலாற்றின் அடிப்படையில் தான் தற்போது உக்ரைன் வெளியுறவு அமைச்சர் சர்வதேச படையை உருவாக்கி புடினை வீழ்த்த அறைகூவல் விடுத்துள்ளார்.

**இரண்டாம் உலகப் போரின் போது இருந்த நிலைமையை உக்ரைனில் ரஷ்யப் படைகள் இப்போது ஏற்படுத்தியுள்ளன.**

இரண்டாம் உலகப் போரின் போது இருந்த நிலைமையை உக்ரைனில் ரஷ்யப் படைகள் இப்போது ஏற்படுத்தியுள்ளன என உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி வேதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான தாக்குதல் தொடங்கிய நாளில் இருந்தே, ஜெலன்ஸ்கி அவ்வப்போது வீடியோக்கள் மூலம் தொடர்பில் இருந்து வருகிறார். தாங்கள் தனித்து விடப்பட்டுள்ளதாக அவர் இரண்டாவது நாளில் வெளியிட்ட வீடியோ உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பின்னர் தானும் தனது குடும்பத்தினரும் தான் ரஷ்யாவின் இலக்கு என்று கூறி ஒரு வீடியோ வெளியிட்டார். அடுத்தடுத்த வீடியோக்களில் தொடர்ந்து உக்ரைனில் தான் இருப்பதாகக் கூறியிருந்தார்.

இப்போது தாக்குதல் 4 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் ஞாயிற்றுக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் வாயிலாக உக்ரைனுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என ரஷ்யா மீண்டும் அறிவித்துள்ள நிலையில் உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி ஒரு நிபந்தனையை முன்வைத்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகக் கூறியுள்ள ஜனாதிபதி ஜெலன்ஸ்கி. ஆனால் ரஷ்யா சொல்வது போல் பெலாரஸில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார். மேலும், உக்ரைன் தனக்கு ஆதரவாக சுதந்திரமான ஒரு படையை உருவாக்குவதாகக் கூறினார். உலகம் முழுவதும் இருந்து வரும் ஆதரவாளர்களைக் கொண்டு அந்த சுதந்திரப் படை உருவாகும் என்று கூறியுள்ளார்.

தற்போது அண்மையில் கிடைத்துள்ள அறிக்கையில், உக்ரைனின் குடியிருப்புப் பகுதிகளிலும் ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்துகின்றன.

(தொடரும்)

## அடுத்த ஆண்டு

# உலகப் பொருளாதார மந்தநிலை ஏற்படும் அபாயம்

## உலக வங்கி எச்சரிக்கை

**(வோஷிங்டன்)**

**அடுத்த ஆண்டு உலகப் பொருளாதார மந்தநிலை ஏற்படும் அபாயம் அதிகம் என உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் 2022 ஆம் ஆண்டுக்கான ஒன்றிணைந்த மாநாடு வோஷிங்டனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

குறித்த மாநாட்டில் கருத்துரைக்கும் போதே டேவிட் மல்பாஸ் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இயற்கை எரிவாயுக்களின் விலைகள் அதிகரித்து வருவதனால் யூரோவை பயன்படுத்தும் நாணய நாடுகள் கூட பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம்..




இது தவிர, கொரோனா பரவலால் சர்வதேச பொருளாதாரத்தில் எதிர்பாராத பின்னடைவை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

வேறு பல பொருளாதார தாக்கம் காரணமாக உலக பொருளாதாரம் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டளவில் 4 டிரில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனக் குறிப்பிட்டார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 300 |
| தக்காளி | 260 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 |
| கோவா | 380 | 380 | 450 |
| கரட் | 250 | 400 | 450 |
| பூசணி | 220 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 200 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 220 |
| பாகற்காய் | 800 | 700 | 800 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 280 | 280 | 340 |
| பீற்றூட் | 350 | 250 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 600 |
| போஞ்சி | 600 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 500 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 480 |
| முள்ளங்கி | 120 | 180 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 50 |
| ஈரப்பலா | 120 | 160 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாஃப் சமையல்...

கப்பட்டுள்ளது.

இதற்கமைய சந்தையில் லாஃப் சமையல் எரிவாயு கொள்கலனின் புதிய விலை 5 ஆயிரத்து 300 ஆக அமையும்.

அதேநேரம் ஐந்து கிலோகிராம் லாஃப் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 200 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

எனவே சந்தையில் அதன் புதிய விலை 2 ஆயிரத்து 120 ரூபாயாக இருக்கும் என லாஃப் நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7)

## கஞ்சாவுடன்...

திற்கிடமான முறையில் பெண் ஒருவர் நிற்பதை அவதானித்த புலனாய்வுத் துறையினர் பொலிஸ் அழைத்து சென்று விசாரணை செய்தபோது 14 மில்லி கிராம் கஞ்சாவுடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,60)

## கரணவாயில்...

மிருந்து 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (ம-7,60)

## வாள் வெட்டுக்கு...

கிளிநொச்சி ஏ9 பிரதான வீதியில் கடந்த 06.10.2022 அன்று குறித்த நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் குறித்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மீண்டும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,60,315,316)

## நடுத்தர வருமான...

கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்த ஒரு மணித்தியாலத்தின் பின்னர், இந்த அறிவித்தலை ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் இந்த பின்நோக்கிய கொள்கையை அரசாங்கம் மாற்றுக்கொள்கை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையை குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடாக இருந்து குறைந்த வருமானம் கொண்ட நாடாக தரம் தாழ்த்துவதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று முன்னதாக நேற்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார். (ம-7)

## யாழ்ப்பாணத்தில்...

சொந்தமான இல. 09 காரைதீவு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள காணி, வாடிவீடுகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 30 வருட குத்தகையின் அடிப்படையில் கிராண்ட் மவுன்டன் ஹோட்டல் கம்பனிக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏற்புடைய நிபந்தனைகளுக்கமைய குறித்த காணியை கிராண்ட் மவுன்டன் (தனியார்) கம்பனிக்கு வாடிவீடுகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்காக முப்பது (30) வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## மக்களின் இறை...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும், இதற்காக சபைகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதை ஏதுவான காரணியாக பயன்படுத்துவதாகவும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பது ஜனநாயகத்திற்கு முரணானது எனவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இந்நிலையில் சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## பொருளாதாரரீதி...

உணவு பாதுகாப்பு மற்றும் போஷணையை உறுதிசெய்யும் நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தும்போது அரச பொறிமுறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏதேனும் பிரச்சினைகள் உருவாகுமாயின் அதனை சரிசெய்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் தலையிடுவதற்குத் தயார் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக விவசாயத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை இயற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"எந்தவொரு பிரஜையும் உணவின்றி பசியால் வாடக்கூடாது" என்ற தொனிப் பொருளில் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையத்தை பலப்படுத்தும் பல் துறைகளின் ஒன்றிணைந்த பொறிமுறையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின்பேரில் அண்மையில் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவ்வேலைத் திட்டத்தின் மாவட்ட மட்ட முன்னேற்றம் தொடர்பில் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் அனைத்து மாவட்டங்களிலும் கிராம மட்டத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ற வகையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது, எரிபொருள் மற்றும் தேவையான உரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பிலும், காணிப்பிரச்சினை, விதைப் பற்றாக்குறை, வனவிலங்குகளால் ஏற்படும்சேதங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)

## உணவு...

பட்டினியிலிருந்து பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பென்று தெரிவித்துள்ளார்.

உணவு நெருக்கடியினை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களின் தகவல்களைத் திரட்டுமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தரவுகளைப் பெற்றபின்னர் பாதிக்கப்பட்டிருப்பதாக இனங்காணப்படும் மக்களுக்கு நிதி உதவி மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## பொதுமக்களுக்...

தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கும் விடயதானங்களை உள்ளடக்கிய விசேட கடிதம் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்களுக்கு இறுதி பதில் அனுப்ப முடியாத பட்சத்தில், ஒரு வாரத்திற்குள் கடிதம் கிடைத்துள்ளதாக இடைக்கால பதிலையும் நான்கு வாரங்களுக்குள் இறுதி பதிலையும் அனுப்ப வேண்டியதன் அவசியம் தொடர்பில் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து உத்தியோகபூர்வ கடிதங்களுக்கும் பதில்களை அனுப்பும் போது, கடிதத்தின் கையொப்பத்திற்கு கீழே, விடயத்திற்கு பொறுப்பான நிறுவன அதிகாரியின் நேரடி தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

அலுவலகங்களின் பொது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல்களை தினமும் பார்வையிட வேண்டுமென்பதுடன், அதற்கென அதிகாரியொருவர் நியமிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/10/11
சீட்டிழுப்பு இலக்கம் 4905
Q 1 1 5 2 3 8

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 214
தனுசு 16 27 30 40 தனுசு

மெகா பவர்
திகதி 11/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1253
A 23 08 17 57 76

கொவிசெத
திகதி 2022.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 3147
W 01 17 67 75

தன நிதானய
திகதி - 2022.10.11
சீட்டிழுப்பு இலக்கம் - 935
O 07 30 38 53

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1360
கடகம் 6 7 9 1 9 9

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1706
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.10.11
ரூ. 3,657,060/-
13 14 16 68 U

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.11
சீட்டிழுப்பு இல : 4041
வர்ணம் : இள நீலம்
ரூ. 3,772,340/-
16 29 43 51 D

ராசி
ரூ. 3,431,686.80
திகதி 2022-10-11
வெற்றி வாரம் 3592
வர்ணம் சிவப்பு
05 22 33 37
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,916,900/-

26 வசனா
B 13 10 18 34 44
சீட்டிழுப்பு வாரம் 1056
வர்ணம் இளஞ்சிவப்பு
2022.10.11 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 268,757,687.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1880
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.10.11
தினம் செவ்வாய்க்கிழமை
E 32 47 76 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,955,140/-

சசிரி
சீட்டிழுப்பு 234
சீட்டிழுப்பு திகதி 2022.10.11
செவ்வாய்க்கிழமை
07 31 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,384,860/-


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மட்டுவில் மடத்தடிச் சந்தி பருத்தித்துறை றோட்டில் 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பாடசாலை, கடைகள், நல்ல தண்ணீர் வசதி, பஸ் (765,794) வசதிகள் உண்டு.
கடைகள், வீடு கட்டலாம். இவை கட்டுவதற்கு நகர சபையில் அனுமதிக்கப்பட்ட PLANகள் உண்டு.
(C-5078)

**078 615 5929, 077 416 3146, 021 223 2797**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**


## நினைவுப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 07 - 09 - 1948

விண்ணில் 13 - 09 - 2002

கண் வைத்திய நிபுணர்

### சரவணமுத்து குகதாசன்

பிரார்த்தனை வைபவம் - 13.10.2022 முற்பகல் 11.00 மணி
இடம் - சிவபூமி பாடசாலை மண்டபம், கோண்டாவில்

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து, இறுதி வைபவத்தில் கலந்து கொண்டு ஆறுதல்கள் கூறியவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள் ளங்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவுப் பிரார்த்தனை வைபவத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் — திருமதி கலைவாணி குகதாசன் (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.


## விற்பனைக்குண்டு

தெரிவு செய்யப்பட்ட தென்னம் பிள்ளை, கமுகம் பிள்ளை என்பன நியாயமான விலைக்கு விற்பனைக்கு உண்டு.

**நா.விஸ்வலிங்கம்**
**தர்மபுரம் வைத்தியசாலை வீதி,**
**கட்டைக்காடு மேற்கு,**
**பெரியகுளம்.**
(C-5081)

**077 422 0108**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 076 097 3127

அமெரிக்க லொத்தர் இலவச விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க **உடனே பதியுங்கள்**

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் வருகிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

**V2 Travels 0768226240 0768226244**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (13090)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13087)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - ஜெயம் (13084)

**077 814 7389, 077 241 7589**

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

## தீபாவளி





ஜவுளிக் கொண்டாட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

திருமணப் பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், Tops, Party Frocks, சல்வார்கள், சல்வார் துணிகள், சேட், T.சேட், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்

## இந்தியன் செலக்‌ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

காலம் : 01.10.2022 முதல் 26.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(C-5079)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.